“வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் விழாவில்

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2ஆம் கட்ட விரிவாக்கம்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச.14–

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (12.12.2025) சென்னை, நேரு உள்விளையாட்டரங்கத்தில், தமிழ்நாடு அரசு பெண்களுக்காக செயல்படுத்தும் பல்வேறு முன்னோடி திட்டங்களின் சாதனைகள், பயனடைந்த மகளிரின் அனுபவங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் முக்கிய பெண் சாதனையாளர்களை ஒன்றிணைத்து, பெண்களின் முன்னேற்றத்திற்காக அரசு மேற்கொண்ட முன்னெடுப்பு களை எடுத்துக்காட்டும் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்ட விழா நடைபெற்றது. இவ்விழாவில், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2–ஆம் கட்ட விரிவாக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்து, 10 மகளிர்க்கு உரிமைத் தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம்!

“தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட மகளிருக்கான ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, மகத்தான கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒருகோடி குடும்பத் தலைவிகளுக்கு, மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கிடும் வகையில் அமைந்திடும்” என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.03.2023 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளான 15.9.2023 அன்று காஞ்சிபுரத்தில் முதல் கட்டமாக சுமார் 1.13 கோடி பயனாளிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார். கலைஞர் மகளிர் உரிமைத் தொகையானது ஒவ்வொரு மாதமும் 15-ஆம் தேதி மகளிருக்கே நேரடியாக சென்றடையும் வகையில் அவர்களது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

பெண்களின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் செயல்படுத்தப்படும் இத்திட்டம், மேலும், 16 இலட்சத்து 94 ஆயிரத்து 339 மகளிர் பயனடையும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2-ஆம் கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றையதினம் மகளிர்க்கு உரிமைத்தொகைக்கான வங்கி பற்று அட்டைகளை (ATM Cards) வழங்கினார். இதன்மூலம், மொத்தம் 1 கோடியே 30 இலட்சத்து 69 ஆயிரத்து 831 மகளிர் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெற்று பயன்பெறுவர்.

இதே நேரத்தில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மகளிர்க்கு நேரடியாக அவர்களின் வங்கி கணக்குகளில் 1000 ரூபாயைச் செலுத்தும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் இரண்டாம் கட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள்.

‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ - தமிழ்நாட்டின் சாதனை பெண்களின் மாபெரும் வெற்றிக் கொண்டாட்டம் விழா

கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், நன்னிலம் மகளிர் நிலவுடைமைத் திட்டம், விடியல் பயணம், மக்களை தேடி மருத்துவம், சுய உதவி குழுக்கள், வெற்றி நிச்சயம், நலம் காக்கும் ஸ்டாலின், பெண் தொழில் முனைவோர், தோழி விடுதிகள் போன்ற திட்டங்களில் பயனடைந்த மற்றும் சாதனை படைத்த பெண்களின் வெற்றிக் கதைகளை வெளிக்கொணரும் நிகழ்வாக மாநில அளவில் ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள்’ விழா நடைபெற்றது.

பெண்கள் நலன்

பணி நிமித்தமாக தங்கள் சொந்த ஊர்களை விட்டு பிற நகரங்களுக்கு சென்று பணிபுரியும் பெண்களின் தேவைகளை உணர்ந்து தரமான, பாதுகாப்பான மற்றும் குறைந்த கட்டணத்தில் பெண்களுக்கான தங்கும் விடுதிகளான “தோழி விடுதிகள்” தமிழ்நாடு அரசின் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் பல்வேறு மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. தோழி விடுதிகளில் தங்கி பயன்பெற்றுள்ள பயனாளிகள், விடுதிகளில் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழல் குறித்தும் எடுத்துரைத்து, இத்திட்டத்தை செயல்படுத்தி வரும் திராவிட மாடல் அரசிற்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மக்களின் இல்லங்களுக்கே சென்று மருத்துவ வசதிகளை அளிக்கும் மக்களைத் தேடி மருத்துவம் மற்றும் மக்களுக்கு உயர் மருத்துவ சேவைகள் வழங்கிடும் வகையில் நலன் காக்கும் ஸ்டாலின் சிறப்பு முகாம் திட்டம், முதலமைச்சரின் மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களின் வாயிலாக பயன்பெற்ற பயனாளிகள் அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், நடிகை திருமதி தேவயானி, திரைப்பட இயக்குநர் வசந்தபாலன், பெண்களுக்கான சிறப்பு மருத்துவர் ஃபரூக் அப்துல்லா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பெண் ஆளுமை!

காவல்துறையை சார்ந்த பெண் கமாண்டோக்களின் சாகச நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். பின்னர், பஞ்சாயத்து தலைவி, பெண் கவுன்சிலர், இஸ்ரோ திட்ட இயக்குநர் திருமதி நிகார் ஷாஜி, மேஜர் ஜென்ரல் திருமதி இக்னிசியஸ் ஃபிளோரா ஆகியோர் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டதோடு, தங்களை ஊக்கப்படுத்தி வரும் தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இதில் பெண் ஓதுவார், கல்பனா சாவ்லா விருது பெற்ற எழிலரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எதிர்பாராத விபத்தில் கைகளை இழந்த பீகார் மாநில இளைஞருக்கு குறுக்கு கைமீள் இணைப்பு மறுசீரமைப்பு நுண்அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு ஒரு கையை செயல்பட வைத்த சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் மருத்துவர் பி.ராஜேஸ்வரி அவர்கள் தலைமையிலான பெண் மருத்துவர்கள் அடங்கிய குழுவினர் பத்து மணிநேரம் தாங்கள் மேற்கொண்ட Cross hand replantation என்ற உலகளவில் மிகவும் அபூர்வமான, சவாலான அறுவை சிகிச்சை மேற்கொண்டு அந்த இளைஞரின் வாழ்வினை மீட்டெடுத்தது குறித்து விளக்கினார்கள்.

இந்நிகழ்வில், இஸ்ரோ திட்ட இயக்குநர் திருமதி நிகர் ஷாஜி, பல்வேறு நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்கள், கவிஞர் கவிதா ஜவஹர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொழில்துறையில் வேலைவாய்ப்பில் பெண்களின் ஏற்றம்!

தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கிடவும், உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களின் முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்த்திட பல்வேறு மாவட்டங்களில் முதலீட்டாளர்கள் மாநாடுகளை நடத்தி, மாநிலம் முழுவதும் உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி, அனைத்து மாவட்டங்களிலும் தொழில் வளர்ச்சி மேம்பட அரசு பல்வேறு சிறப்பான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இத்தொழில் நிறுவனங்களில் குறிப்பாக பெண் தொழிலாளர்கள் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு பெற்று பயன்பெற்ற பெண் தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு பெற்று தங்கள் வாழ்வு மேன்மையுற உதவிய தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், தமிழ்நாடு அரசு வழங்கிய கடனுதவிகள் மற்றும் திறன் பயிற்சிகள் மூலம் வெற்றிகரமான தொழில் முனைவோர்களாக திகழும் பெண்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், தையல் தொழில் செய்து வரும் முகாம்வாழ் இலங்கைத் தமிழ்ப் பெண் செல்வி சாரா அவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தான் எம்பிராய்டரி செய்து தயாரித்த “அப்பா” என்ற எழுத்துடன்கூடிய கைக்குட்டையை வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த காது கேளாத வாய்பேச முடியாத மாற்றுத்திறனாளி எழிலரசி அவர்கள் வெற்றி நிச்சயம் திட்டம் மூலம் திறன் பயிற்சி பெற்று வேலைவாய்ப்பு கிடைத்து பயனடைந்த அனுபவத்தை சைகை மொழி மூலம் விளக்கி, தமிழ்நாடு அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்நிகழ்வில், நடிகர் சத்யராஜ், திரைப்பட இயக்குநர் மற்றும் எழுத்தாளர் ஞானவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

விடியல் பயணம் திட்டம்!

பெண்களுக்கான விடியல் பயணம் திட்டத்தில் பயன்பெற்ற பயனாளிகள், இத்திட்டத்தின் மூலம் பேருந்து பயணத்திற்கான செலவு மிச்சப்படுத்துவதன் மூலம் தங்கள் வருமானத்தின் ஒரு பகுதியை சேமிக்க முடிகிறது என்றும், அதனை குழந்தைகளின் படிப்பு மற்றும் குடும்பத்தின் இதர செலவுகளுக்கு பயன்படுத்துவதாக தெரிவித்து, இத்திட்டத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வரும் அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தில் பயன்பெற்று வரும் பயனாளிகள், இத்தொகையினை தங்கள் குடும்பத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தியது குறித்து விளக்கி, தமிழ்நாடு அரசிற்கு தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில், நடிகை திருமதி ரோஹினி, திரைப்பட இயக்குநர் ராஜு முருகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழாவில், பெண் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், இந்திய காவல் பணி அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றும் பெண்கள் உள்ளிட்ட பெண் அரசு உயர் அலுவலர்கள் மேடையில் தோன்றினார்கள்.

சிறப்பு விருந்தினர்கள்!

இவ்விழாவில், சமூக சேவகியும் மற்றும் சமூக அநீதிகளுக்கு எதிராக காந்திய வழியில் போராடியவரும் பத்மபூஷன் விருது பெற்றவருமான திருமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் மற்றும் காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பேட்மிட்டன் விளையாட்டு வீராங்கனையும், 2024-ஆம் ஆண்டு நடைபெற்ற பாரா ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றவருமான செல்வி துளசிமதி முருகேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, டி.ஆர்.பாலு உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இ.பரந்தாமன், எபிநேசர், எம்.கே. மோகன், த.வேலு, ஜோசப் சாமுவேல், தாயகம் கவி உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை செயலாளர் திருமதி ஜெயஸ்ரீ முரளீதரன், பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்கள், முக்கிய பெண் பிரமுகர்கள், திரைத்துறையை சார்ந்த கலைஞர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் திறந்து வைக்கவுள்ளார்!

தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையம் - வ.உ.சி. நகரில் விளையாட்டு மையம்!

கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சிஎம்டிஏ சார்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையத்தின் முன்னேற்றப் பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உள்ளனர்.

சென்னை, டிச.14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் வருகின்ற 2026 ஜனவரி மாத இறுதிக்குள் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையம் மற்றும் புதுவண்ணாரப்பேட்டை, வ.உ.சி. நகர் ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும் என அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (13.12.2025) இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆர்.கே.நகர் சட்டமன்றத் தொகுதியில் புதிதாக கட்டப்பட்டு வரும் தண்டையார்பேட்டை நவீன பேருந்து நிலையத்தின் முன்னேற்றப் பணிகளையும், புதுவண்ணாரப்பேட்டை, வ.உ.சி. நகரில் கட்டப்பட்டு வரும் ஒருங்கிணைந்த விளையாட்டு மையத்தின் (Tondiarpet Integrated Sports Centre) முன்னேற்றப் பணிகளையும், துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் ஸ்டான்லி அரசு மருத்துவமனை சாலையில் கட்டப்பட்டு வரும் 776 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான பணிகளையும், இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, மூலகொத்தளத்தில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தின் கட்டுமானப் பணிகளையும் மற்றும் துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, வால்டாக்ஸ் சாலை, அண்ணா பிள்ளை தெருவில் கட்டப்பட்டு வரும்”ஒருங்கிணைந்த வளாகத்திலுள்ள” புதிய சமுதாய நலக்கூடம், மாநகராட்சி அச்சகம் மற்றும் விளையாட்டுத் திடலின் கட்டுமான பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட ஒப்பந்ததாரர்கள் மற்றும் பொறியாளர்களை அறிவுறுத்தினார்.

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது:

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு பணிகளில், ஒரு முக்கியப் பிரிவாக தண்டையார்பேட்டை பேருந்து நிலையத்தை புதிதாக வடிவமைக்கும் பணிகள் துவங்கப்பட்டு ள்ளன. இந்தப் பணிகள் 2026 ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படவுள்ளதாக, திராவிட ஆட்சியின் நாயகன், எங்கள் உயிரினும் மேலான அன்புத் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்துள்ளார்.

இதன் திட்ட மதிப்பு ரூபாய் 20 கோடி. இந்த தண்டையார்பேட்டை பேருந்து நிலையம், போக்குவரத்து துறை துவங்கப்பட்ட போது முதன்முதலாக தொடங்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க பணிமுனையாகும். அந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பணிமுனை, எங்கள் முதல்வர் அவர்களின் ஆட்சி காலத்தில், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் மக்கள் பயன்பாட்டிற்கு வரும்.

இதனுடன் இணைந்து, ஆர்.கே. நகர் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு வீரர்கள் அதிக அளவில் உருவான பகுதியாகும். கேரம், பாக்சிங், கபடி என அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் இங்கிருந்துதான் உருவாகின. அந்த விளையாட்டு வீரர்களுக்காக, நம்முடைய விளையாட்டுத் துறை அமைச்சர் மற்றும் துணை முதலமைச்சராக உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி, விளையாட்டுத் துறையின் பொற்காலம் என்றால் மிகையாகாது.

அந்த வகையில், சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் தற்போது ரூபாய் 20 கோடி மதிப்பீட்டில், டேபிள் டென்னிஸ் மற்றும் சிலம்பம் மைதானம், குத்துச் சண்டை அரங்கம், கூடைப்பந்து விளையாட்டு அரங்கம், உடற்பயிற்சி கூடம், பிசியோதெரபி அறை, பல்நோக்கு விளையாட்டு வசதிகள், கழிப்பிட வசதி, குடிநீர் வசதிகள் ஆகியவை அமைக்கப்பட உள்ளன.

இதனுடன், சட்டப்பேரவை உறுப்பினர் எபினேசர் அவர்கள் வைத்த கோரிக்கைக்கு இணங்க, ஒரு கேரம் அரங்கமும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகளும் 2026 ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தத் தொழிலாளர்களைக் கொண்டு இந்தப் பணிகள் முடிக்கப்படுமா என்ற கேள்விக்கு - அமைச்சர் அவர்களின் பதில்

நிச்சயமாக, திராவிட மாடல் ஆட்சியில் சொன்னதை செய்வோம்; செய்வதைத்தான் சொல்லுவோம். இந்தப் பணிகள் தேர்தல் அறிக்கையில் இடம்பெறாதவை. பல்வேறு இடர்பாடுகள், இயற்கை சீற்றங்கள் போன்றவற்றுக்கிடையிலும், இந்தப் பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தான், துறையின் அமைச்சராக நான் ஒருமுறை ஆய்வுக்கு வருகிறேன். அதேபோல், எங்கள் துறையின் செயலாளர் திருமதி. காகர்லா உஷா அவர்கள் ஒரு முறை ஆய்வுக்கு வருகிறார். துறையின் உறுப்பினர் செயலாளர் பிரகாஷ் வருகிறார்.

மேலும், சென்னை மாநகரப் பணிகள் என்பதால், மாநகராட்சியின் ஆணையாளர் குமரகுருபரன், மாநகர மேயர், அதே போல் ஆர். டி.சி. ரவி உள்ளிட்டோர் அனைவரும் ஒருங்கிணைந்து ஒத்துழைத்து, இந்தப் பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு குறித்த காலத்திற்குள் கொண்டு வர தேவையான அழுத்தத்தை தொடர்ந்து வழங்கி வருகின்றோம்.

இவ்வாறு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது ஆர்.கே.நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் மூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மாநகராட்சி நகர மைப்பு குழுத்தலைவர் இளைய அருணா, மண்டலக் குழுத்தலைவர் கள் நேதாஜி யூ.கணேசன், பி.ஸ்ரீராமுலு, சிஎம்டிஏ தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர்கள் பாலமுருகன், ராஜன்பாபு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் சௌந்தரபாண்டியன், பொது மேலாளர் (இயக்கம்) நெடுஞ்செழியன், மாமன்ற உறுப்பினர்கள் தாஹா நவீன், திருமதி. பவித்ரா நரேந்திரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் முரளி, ராஜசேகர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் மருதம் ஊராட்சியில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பணி செயல்பாடுகள் குறித்து ஒன்றிய கழக செயலாளரும்ஒன்றிய குழு உறுப்பினருமான கெ. ஞானசேகரன் விளக்கிப் பேசினார். கழக நிர்வாகிகள். எஸ் ருத்ரகோட்டி. இ தினகரன், ஆதிநாராயணன், எம்.பி.தாமஸ். இரா.கார்த்திகேயன், எம்.சங்கர். திருமதி.வீரம்மாள் மாயகிருஷ்ணன், திருமதி.மகேஸ்வரி மூர்த்தி, திருமதி சாந்தி தயாளன், வாக்குச்சாவடி முகவர்கள் தனசேகரன், சம்பத் வீரராகவன், சதீஷ், நள மகராஜன், மாசிலாமணி, கார்த்திக் மற்றும் பலர் உடன் உள்ளனர்.